OS: 656/2018

Date: 28.09.2022

பெயர் : சண்முகம்

**வாதி தரப்பு சாட்சி 1 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி - 5 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில்**

எனது பெரியப்பா 1ம் பிரதிவாதி வீரமுத்து கடந்த 50 ஆண்டுகளுக்கு முன்பாக வீடு கட்டி தனியாக வாழ்ந்து வந்தார் என்றால் சரிதான், கை காட்டப்பட்ட சொத்தில் அவரவர்கள் வீடு கட்டினார்கள். அவரவர்கள் பெயரில் உள்ள வீட்டிற்கு மின் கட்டணம், மற்ற குடிநீர் கட்டணம் அனைத்தும் செலுத்தி வருகிறார்கள். நான் எந்த வீட்டில் இருந்து வருகிறேன் என்றால் எனது தந்தை கந்தசாமி கட்டிய வீட்டில்தான் இருந்து வருகிறேன். இறந்துபோன கோவிந்தன் அவருக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் வீடு கட்டி இருந்தார் என்றால் முதலில் சிறிய ஒரு ஓலை வீட்டில்தான் இருந்தார், அதற்கு பின்னிட்டு ஓட்டு வீடு கட்டியுள்ளார். தாவா சொத்தில் எத்தனை வீடுகள் உள்ளது என்றால் மொத்தம் 3 வில்லை வீடுகள் உள்ளது. ஆஸ்பிடாஸ் வீடு எத்தனை வீடு உள்ளது என்றால் நான் குடியிருக்கும் வீடு இடிந்துவிட்டதால் நான் அதே வீட்டை ஆஸ்பிடாஸ் போட்டு இருந்து வருகிறேன்.

எனது தந்தைக்கு பாத்தியப்பட்ட வீட்டில் எனது சகோதரிகள் ருக்மணி, பூபதியும் ஒரு வீட்டில் ஆளுக்கு பாதியாக பிரித்து இருந்து வந்தார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தில் வீடுகள் உள்ளதை சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான், அவரவர்கள் தனியாக குடியிருந்து வருவதால் அதை சேர்க்கவில்லை. தாவா சொத்து விவரத்தில் மரங்கள் உள்ளதாக சொல்லியுள்ளேன். முதன் முதலில் தாவா தாக்கல் செய்யும்போது என்னென்ன மரங்கள் உள்ளது என சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது தந்தைக்கு விடப்பட்ட இடத்தில் ஒரு போர்வெல் போடப்பட்டது என்றால் சரிதான், குடிநீர் தேவைக்காக மற்ற பாகஸ்தர்களிடமும் கேட்ட பின்புதான் போர்வெல் போடப்பட்டது. போர்வெல் குறித்து வழக்கு சொத்து விவரத்தில் காட்டப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் தென்னை மரங்கள் இருந்ததா என்றால் இருந்தது, நாளடைவில் தண்ணீர் பற்றாக்குறையால் மரங்கள் பற்றுபோய்விட்டது, தாவா தாக்கல் செய்யும் போது தென்னை மரங்கள் இல்லை. பனை மரங்கள் உள்ளதா என்றால் உள்ளது, தாவா சொத்து முழுவதும் ஆங்காங்கே பனை மரங்கள் உள்ளது. வேப்ப மரங்கள்

எவ்வளவு உள்ளது என குறிப்பிட்டு சொல்லவில்லை. தாவாவில் மரங்களை கேட்டுள்ளேனா என்றால் இல்லை.

2ம் பிரதிவாதி கோவிந்தன் பாகத்தில் ஒரு கிணறு உள்ளது என்றால் இருந்தது, பராமரிப்பு இல்லாமல் இடிந்துவிழுந்துவிட்டது. மேற்படி கிணற்றில் 5HB மோட்டார் இருந்ததா என்றால் இல்லை. மேற்படி கிணற்றில் 5HB மோட்டார் இருப்பதால் தாவாவில் காட்டியுள்ளேன், தற்போது இல்லை என சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சொத்து விவரங்களே சரியாக கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் இறந்துவிட்டதால் அவரது வாரிசுகளை கட்சி சேர்க்க மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். திருத்தப்பட்ட தாவாவில் கூடுதலாக 90 தென்னை மரங்கள், 20 பனை மரங்கள் இருந்ததாக நீதிமன்றத்தில் அனுமதி இல்லாமலேயே நாங்களே திருத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. 5, 6, 7 பாகத்தில் அவர்களுக்கு உள்ள நிலமானது குறைவாக உள்ளது என்றும், அந்த பூமி பாறைகள் அதிகளவில் உள்ளது என்றால் சரியல்ல. 1984ம் ஆண்டு நில உடைமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பட்டாவில் யார் யார் சொத்தில் அனுபவத்தில் இருந்தார்களோ அவர்களுக்கு பட்டா அவர்களது பெயரில் வழங்கப்பட்டது என்றால் சரியல்ல, பட்டா ஒருவர் பெயரிலும் அனுபவம் வேறு ஒருவர் பெயரிலும் மாறி மாறி உள்ளது. அது சம்மந்தமாக வருவாய் கோட்டாட்சியரிடம் மேல்முறையீடு செய்தீர்களா என்றால் மேற்படி பட்டாவிற்கும் அனுபவத்திற்கும் வித்தியாசம் உள்ளது வருவாய் வட்டாட்சியரிடம் வழங்கப்பட்ட பட்டாக்களை ரத்து செய்ய மனு அளித்துள்ளோம். வருவாய் வட்டாட்சியரிடமும், கோட்டாட்சியரிடமும் வழங்கப்பட்ட நகல்களை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல.

எனது தாவாவில் மேட்டுர் வட்டாட்சியரிடம் 14.10.2010ம் வருடம் மனு அளித்ததாக சொல்லப்பட்டுள்ளது. எனது வா.சா.ஆ.13 ஆவணமானது கார்பன் நகல் என்றும், அது ஓமலூர் தாசில்தாருக்கு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். நான் வா.சா.ஆ.13 அசலை தாக்கல் செய்யாமல் கார்பன் காப்பி மட்டுமே தாக்கல் செய்துள்ளேன். மேட்டுர் தாசில்தாரிடம் பட்டாவை ரத்து செய்ய வேண்டி மனு அளிக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை, ஏனெனில் தாவா சொத்து அமைந்துள்ள இடம் ஓமலூர் வருவாய் வட்டத்திற்கு உட்பட்டது என்றால் சரியல்ல. 1984ம் வருடம் தாவா சொத்திற்கு தனி பட்டாக்கள் வழங்கப்பட்ட நிலையில் சுமார் 24 வருடங்கள் கழித்துதான் மனு அளிக்கப்பட்டது என்றால் அதற்கு காரணம் எனது தந்தை படிப்பு

இல்லை என்பதாலும் மேலும் அப்போது எனது தந்தையின் சகோதரர்கள் ஒற்றுமையாக இருந்ததால் அதை பொறுத்து கவனிக்காமல் விட்டுவிட்டார்கள். மேற்படி விவரங்களை எனது தாவாவில் குறிப்பிடவில்லை. வா.சா.ஆ.5 முதல் 11 சான்றாவணங்கள் அனைத்துமே எனது தந்தை கந்தசாமியின் பெயரில் தனிப்பட்ட பெயரில் கட்டிய ரசீதுகள் என்றால் சரிதான். மேற்படி கந்தாய ரசீதில் பட்டா எண்.43 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கூட்டு குடும்ப சொத்தாக இருப்பின் மேற்படி கந்தாய ரசீதுகளில் கந்தசாமி வகையறா என்றுதான் ரசீதுகள் போடப்படும், ஆனால் நான் தாக்கல் செய்துள்ள கந்தாய ரசீதுகளில் எனது தந்தை பெயரில் தனிப்பட்ட முறையில் உள்ளதால் தாவா சொத்துக்களை பொறுத்து ஏற்கனவே பாகம் ஏற்பட்டுவிட்டது என்றால் சரியல்ல.

நானும் எனது தந்தையும் சேர்ந்து மற்ற சொத்தின் உரிமையாளரிடம் கூட்டு உரிமையாளர் என்ற அடிப்படையில் இருந்ததற்கான ஆவணங்கள் என்னால் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. எனது சித்தப்பா 2ம் பிரதிவாதி கோவிந்தன் அவர்கள் அனுபவத்தில் உள்ள நிலத்தின் வழியாக ரோடு அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, அவர் ஓட்டி வந்த நிலத்தினை ஒட்டி வெளிபக்கத்தில் தான் மேற்படி ரோடு அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி ரோடானது தாவா சொத்தின் சர்வே எண்ணில் உள்ளதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதி கோவிந்தன் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஓமலூரில் அ.வ.எண்.338/2004 என்ற வழக்கில் ரோடு அமைக்கக்கூடாது என வழக்கு போட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா இடத்தில் உள்ள சமாதிகளை இடிக்கக்கூடாது என பஞ்சாயத்து தலைவரிடம் சொல்லப்பட்டது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதிதான் பஞ்சாயத்து தலைவரிடம் மேற்படி சமாதிகளை இடிக்காமல் ரோடு போட்டுக்க அனுமதி அளித்தார் என்றும், எங்களது தரப்பில் அதற்கு எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

தாவா சொத்தில் 2ம் பிரதிவாதி எவ்வித கட்டிடமும் கட்டக்கூடாது என பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி அவரது வீட்டில் வில்லை வீடு கட்டி குடியிருந்து வருவதால் நான் தாவாவில் 2ம் பிரதிவாதியை பொறுத்து கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல, நான் அவர்களிடம் பாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன், அந்த வழக்கு முடிந்த பின்பு கட்டிக்கொள்ளலாம் என்று சொன்னேன். அது சம்மந்தமாக தாவாவில் திருத்தம் எதுவும் செய்யவில்லை. UDR பட்டா வழங்கப்பட்டு 24

ஆண்டுகள் ஆகிறது என்பதால் மேற்படி பட்டாவை ரத்து செய்ய முடியாது என்றால் சரியல்ல. பட்டா பாஸ் புக் Act படி பட்டாவை ரத்து செய்ய வேண்டி வருவாய் துறை அலுவலர்களிடம்தான் முறையாக மனு தாக்கல் செய்ய வேண்டும், நேரடியாக சிவில் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல. தாவா வழக்கு போட்ட பின்பு யாராவது சொத்தை விற்பனை செய்துள்ளார்களா என்றால் நான் பார்க்கவில்லை. நான் பட்டா எண்.7, 163, 43, 27 ஆகிய எண்களில் உள்ள பட்டாக்களை நான் ரத்து செய்ய கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

எனது தாத்தா முருகன், சின்னபையன் ஏற்கனவே 70 ஆண்டுகளுக்கு முன்பே வாய்மொழியாக பாகம் செய்துகொண்டு அவர்களது அனுபவத்தில் உள்ளது என்றும், தனித்தனியாக வீடு கட்டி அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல, யாரும் வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொள்ளவில்லை, அப்போது கை காட்டப்பட்ட இடத்தில் அவரவர்கள் அனுபவத்தில் இருந்து வந்தார்கள். வழக்கில் தேவையான தரப்பினர்களை கட்சி சேர்க்கவில்லை என்பதால் இந்த தாவா தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல. ஆண் வாரிசுகள் அனைவரையும் சேர்த்துள்ளேன், பெண் வாரிசுகள் அனைவருக்கும் சீர்வரிசைகள் செய்ததால் சேர்க்கவில்லை. தாவாவில் 4வது பத்தியில் பெண் மக்களுக்கு கூட்டு குடும்ப சொத்தில் இருந்து வரும் வருமானத்தை வைத்து நல்ல முறையில் திருமணத்தின்போது சீர்வரிசைகள் செய்ததாக சொல்வது தவறு என்றால் சரியல்ல.

ஆண்டு வருமானம் தாவா சொத்தில் எவ்வளவு வரும் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும், சீதனமாக பெண் மக்களுக்கு எவ்வளவு செய்யப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது தாத்தா சின்னபையனும், முருகனும் அண்ணன் தம்பிகள் என்றால் சரிதான். மேற்படி சின்னபையனுக்கும், முருகனும் அனுபவித்து வந்த சொத்துக்கள்தான் தாவா சொத்துக்கள் என்றால் சரிதான். மேற்படி சொத்துக்களில் எனது தாத்தா சின்னபையனுக்கு பாதியும், மற்றொரு தாத்தா முருகனுக்கு பாதியும் என்றால் சரிதான். இதில் சின்னபையன் வாரிசுகளுக்கு பாதி பாகம் உள்ளது என்றால் சரிதான். எனது தாத்தா முருகன் வாரிசுகளுக்கு பாதி பாகம் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்துக்களை பொறுத்து 3ல் 1 பாகம் வழக்குரையில் கேட்டுள்ளேன் என்றால் சரிதான், அது தவறுதலாக தட்டச்சு பிழையால் ஏற்பட்டுள்ளது. எவ்வளவு பாகம் நான் தாவா சொத்தில்

கேட்கிறேன் என்றால் 4ல் 1 பங்கு பாகம். மீதியுள்ள பாகம் யார் யாருக்கு பாத்தியம் என்றால் எனது தாத்தா முருகன் வாரிசான கோவிந்தனுக்கு 4ல் 2 பாகமும், மீதியுள்ள ¼ பாகம் வீரமுத்துக்கு வருகிறது. நான் பாக விகிதாச்சாரங்களை சரியாக கணக்கிடாமல் தாவாவில் கேட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல. எனது நிருபண வாக்குமூலத்திலும் பாக விகிதாச்சாரம் தவறாக போட்டுள்ளேன் என்றால் சரிதான், அதை தாவாவில் திருத்தம் செய்துகொள்கிறேன். இதுவரை தாவாவில் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல, நடவடிக்கை எடுக்கவுள்ளேன். நான் தாவாவில் கேட்டுள்ள பரிகாரங்கள் கிடைக்கக்கூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல, தாவா தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை - 3, 4 பிரதிவாதிகள் தரப்பில்**

நான் தாவாவில் அரசு தரப்பில் மாவட்ட ஆட்சியர், தாசில்தாரை இவ்வழக்கில் கட்சி சேர்த்துள்ளேன். எதற்காக அவர்களை இவ்வழக்கில் கட்சி சேர்த்துள்ளேன் என்றால் பட்டா ஒருவர் பெயரிலும், அனுபவம் ஒருவர் பெயரிலும் மாறி மாறி உள்ளதால் அதனை சரிசெய்ய நீதிமன்றம் உத்தரவிட வேண்டும் என்பதற்காக கட்சி சேர்த்துள்ளேன். நான் தாவாவில் நிலங்கள் மாறுபட்டு உள்ளது என்பது குறித்து வழக்குரையில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. 3, 4 பிரதிவாதிகளுக்கு எதிராக எனது வழக்கில் வழக்குமூலமே ஏற்படவில்லை என்றால் சரியல்ல. 3, 4 பிரதிவாதிகள் பட்டாவில் உள்ள தவறுகளை சரிசெய்ய நேரடியாக மனு தாக்கல் செய்யாமல் நீதிமன்றத்திற்கு வந்து வழக்கு தாக்கல் செய்தது தவறானது என்றால் சரியல்ல. நான் மேற்படி பட்டா சம்மந்தமாக மேல்முறையீடு வருவாய் கோட்டாட்சியரிடம்தான் மனு செய்திருக்க வேண்டும், அவ்வாறு செய்யாமல் தாவா தாக்கல் செய்தது நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. 3, 4 பிரதிவாதிகளிடம் மனு அளித்ததில் அவர்கள் பட்டாவை ரத்து செய்வார்கள் என பார்த்தேன், ஆனால் அவர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதால்தான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேன்.

நான் ஓமலூர் வட்டாட்சியரிடம் மட்டுமே மனு அளித்துள்ளேன் என்றும், மேல்முறையீடு மேட்டூர் கோட்டாட்சியரிடமோ, மாவட்ட ஆட்சியரிடமோ செய்தேனா என்றால் இல்லை, அதற்கு காரணம் பட்டாவும் விஸ்திரணமும் மாறுபட்டு உள்ளதால் பாகமே பிரித்துக்கொள்ளலாம் என்பதால் இவ்வழக்கை தாக்கல் செய்தேன். எந்த பட்டா எண்கள் மாறுபட்டு உள்ளது என்றால் பட்டா எண்.27, 7, 163 மாறியுள்ளது. யார் யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் பட்டா எண்,7

கோவிந்தன் 2ம் பிரதிவாதி பெயரில் உள்ளது. அது எனது அனுபவத்தில் உள்ளது, பட்டா எண்.163 வீரமுத்து பெயரில் உள்ளது, அது எனது அனுபவத்தில் உள்ளது, பட்டா எண்.27 நிலமானது எனது தந்தை கந்தசாமி பெயரில் உள்ளது, ஆனால் நிலமானது 1ம் பிரதிவாதி அனுபவித்து வந்தார். பட்டா மாறுபட்டுள்ளது, நாங்கள் மாறுபட்ட நிலத்தை அனுபவித்து வருகிறோம் என்பதை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கில் எனது தரப்பு ஆவணங்கள் இவ்வழக்கிற்கு எந்த நிலையிலும் ஆதரவாக இல்லை என்றால் சரியல்ல. 3, 4 பிரதிவாதிகள் இவ்வழக்கிற்கு தேவையில்லாமல் கட்சி சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. 3, 4 பிரதிவாதிகளை பொறுத்து தாவா தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

**ஒப்பம்/PW1**

**ஒப்பம்/சார்பு நீதிபதி, ஓமலூர்**